ஏரம்புமாமா - அத்தை

உ

சிவமயம்



தமிழ் ஈழம்

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும்

இலண்டனை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி பிறேமலதா ஜீவகன்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

In Memory of

# Late Mrs Premalatha Jeevagan

17.06.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஆசை மகளாய்

அன்புச் சகோதரியாய்

இனிய மனையாளாய்

இளம்பிஞ்சின் தாயாய்


சின்ன சிறு வயதில்

சிறகடித்துப் பறந்து விட்ட

எம் இனிய லதா உனக்கே

ஏக்கமுடன் சமர்ப்பித்தோம்

**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமதி பிறேமலதா ஜீவகன் அவர்கள்



மண்ணில்
**27. 05. 1976**

விண்ணில்
**18. 05. 2004**

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு தாரண வைகாசி நாள் அபரம்
பூண்ட அமாவாசை தன்னில் - மாண்புடைய
தெய்வத்தின் தாள்தன்னில் சேர்ந்தாள் பிறேமலதா
வையத்தோர் கண்கலங்கத் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருச்சிற்றம்பலம்

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல் மிகுப்பிலணைந்த பிரானடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள் போற்றி

## தேவாரம்

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா நேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநனியப் பெயர்த்துஞ் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரோடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரோடு நோகே னார்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப்பாகா அம்பலக் கூத்தா!
அயனொடு மாலநீ யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்
பக்தர்கள் வஞ்சகர் போய் அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்புவேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் - உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏழுகடல் மணலை அளவிடில் அதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்
இனியுதைபயம் எனதுயிர் உடலும்
இனியுடல்விடுக முடியாது

கழுகொடுநரியும் எரிபுலி மறவி
கமலனும் மிகவும் (மிகவும்) அயர்வானார்
கடனுதைபயம் அடிமை உன்னடிமை
கடுகி உன்னடிகள் தருவாயே

விழுதிகழ் அழகி மரகதவடிவி
விமலிமுன்னருளும் முருகோனே
விரிதல மெரியக் குலகிரி நெரிய
விசைபெறும் மயிலில் வருவோனே.

2. தீராப் பிணிதீர ஜீவாத்தும ஞான
ஊராட்சியதான ஓர்வாக் கருள்வாயே
பாரோர்க் கிறைசேயே பாலாகிரிராஜ
பேரார் பெரியோனே பேரூர் பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகச் சிறப்பு வெண்பா

தொல்லை இரும் பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

**சிவபுராணம்**

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசன்அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப்பன் யான்

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச்சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற்பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரத்தின் சுவடுகளில்

ஈழத் திருநாட்டில் யாழ்ப்பாண மாநகரில்
தென்ம ராட்சிசேர் மீசாலைப் பதிதன்னில்
தாமோ தரம்பிள்ளை யோகேஸ்வரி செய்த
புண்ணிய பயனதனால் வந்தார்கள் புத்திரிகள்
ராதா சீதா சுதா என்றோரை
அடுத்து வந்தாளே பிறேம லதாவெண்ன
சின்ன வயதுதொட்டு சீராட்டிப் பாலூட்ட
அன்ன நடைபோட்டு ஆனதோர் நளினமுடன்
சித்திரம் போல் சிரித்து சின்னமட மான்அன்ன
மருண்டவிழி தானசைத்து மங்கையென தலைசாய்த்து
பள்ளிப் படிப்பெல்லாம் சாவ இந்துவிலே
வண்ணமுகத் தான்கற்று வஞ்சியவள் வருகையிலே
பாட்டும் பரதமும் ஈட்டிய மேடைகளே
நாட்டிய நாடகங்கள் நாயகி தானென்ன
காட்டிய பாத்திரமோ எத்தனை தானம்மா
பரதத்தில் நீ கலா வித்தகர்
பாட்டிசைக்கும் குயிலாகி பாவைநீ மயிலாகி
பல்கலைக் கழகத்தில் பாங்குறவே படித்திடவும்
பார்த்தோர் கொள்ளையிடும் பண்பு அதனாலும்
இலண்டனிலே தம்மகனாம் ஜீவகனின் துணையாக்க
செல்வ ரத்தினமும் செல்வ பாக்கியமும்
அச்சுவேலி யில்இருந்தே ஆசையுடன் தான்வந்து
பேசி முடித்தார்கள் பெருமையும் கொண்டார்கள்

சின்ன வயதுக்குள் சீமை சென்றேநீ
பின்னும் படிப்பைத் தொடர்ந்தே நின்றாயே
என்னென்ன கற்பனைகள் எதனைத்தான் சொல்வோம்நாம்.

அப்பா சுகமில்லை அவசரமாய் பறந்து வந்தாய்
அந்திமக் கிரியையெல்லாம் வெம்பிவெம்பி நீ இருந்தாய்
இப்போ உன்போல் பிஞ்சு ஒன்றைத் தந்துவிட்டு

எப்படிப் பறந்து சென்றாய் அம்மா நாம் தாங்குவோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவனின் கண்ணீர் துளிகள்

மண்ணில் மனைவியாய் மலர்ந்து!
மனையில் மகிழ்ச்சியை மல்கி!!
மழலையாய் மகளொன்று தந்து!!!
மனம்போல் மதிப்புடன் வாழ்ந்து!!!!
மனைசிறக்க வந்தவளே
உனையிழந்து தவிக்கின்றேன்
ஓடோடி ஒருமுறை வந்தெனக்கு
உன் ஒளிமுகம் காட்டம்மா

காலம் காலமாய்,
களிப்பாய் இருப்போமென
கனவுகள் கண்டிருந்தேன்
கைபிடித்த காரிகை உன்னோடு,
கடைசிவரை காலத்தை கழித்து,
களிப்பெய்ய காத்தே இருந்திருந்தேன்!!
காலனவன் உனை கவன்றுவிட்டான்!!!
கதறுகின்றேன் நான் அம்மா.
காட்சி தந்தொருக்கால்,
என்கதறல் கழையம்மா!!!

என் மனைவியாய்
மண்ணில் மலர்ந்தவளே
மகளொன்று மடியில் தந்துவிட்டு
மண்ணைவிட்டு மறைந்துவிட்டாய்
மகளும் மணாளன் நானும்
மாறத்துயரால் மாளுகின்றோம்
உன்மதிமுகம் காட்டியெம்மை
மகிழ்வடையச் செய்வாயா?

காலனவன் உனைக்கவன்று விட்டான்!
நீகால்வைத்த இடமெல்லாம்
உன் கதைச் சத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் காதில் கேட்கிறது
என் வீட்டில்இருப்பதொன்றும்
எனக்கு தெரியவில்லை
அவற்றிலெல்லாம் நீயே இருக்கின்றாய்!
காணுமிடமெல்லாம் நீயே நிற்கின்றாய்!!
என் கண்ணுக்குள் வந்தொருக்கால்
காட்சிதான் தருவாயா?

என்கைத்தலம் பற்றி வந்தவளே
கதறியழுது விட்டேன் அம்மா!
கதியற்று கலங்குகின்றேன் தாயே!!
என் கண்களில் இனிகண்ணீர் இல்லையடி
இதனால் என் இதயம்
செந்நீர் சிந்தி சேறாய் போனதம்மா
லதா நீ மறைந்து விட்டாய்
லதா உன்னை லதிக்காவாய் பார்க்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லதிக்காவின் கண்ணீர்த்துளிகள்

அம்மாவே ? அம்மாவே?
அழுகின்றேன் அம்மாவே
அழுகையை அகற்றி நிற்க,
அகிலத்தில் அனைவருக்கும்
அம்மாக்கள் இங்குண்டு
அழுகின்றேன் அம்மா நான்!
அணைப்பார் எனை யாரம்மா!!

அரும்பிவிட்டேன் அம்மாநான்!
அறிவுதெரிந்து ஆளாய் ஆனவுடன்,
சும்மாகூட அம்மாவென
ஆசையாய் நானழைக்க,
அம்மா எனக்கு,
யாரம்மா இங்குண்டு.


நீ நித்திரையில் நீண்டுவிட்டாய்!
நினைக்கும் நிலையில் நானில்லையம்மா!!
நினைவு எனக்கு நீளுகின்ற நேரத்தில்,
நிலாக்காட்டி அமுதூட்டி,
நித்திரையில் நான் உன்மேல் கால்போட
நீ இங்கு இல்லையம்மா!!
நான் எங்கு போக அம்மா!!!

விளையாடும் வேளை வரும்போது,
விழுவேன் நான்!
அழுவேன் நான்!!
விழும்போது தூக்க
அழும்போது அரவணைக்க
அகிலத்தில் அம்மாவாய்
எனக்கு யாரம்மா இங்குண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டம் கொண்டாட்டமென்று வந்துவிட்டால்;
அவரவர் பிள்ளைகளை அம்மாக்கள்
அழகழகாய் அமர்க்களப்படுத்தி நிற்பார்!
ஆட்டம் கொண்டாட்டமென்று
என்வாழ்வில் வந்துவிட்டால்
அடுக்கடுக்காய் கடையேறி!
அளவான சட்டைதேடி!!
அழகாய் அலங்கரித்து!!!
அரங்கத்தில் எனை அமர்த்த
அகிலத்தில் யாரம்மா எனக்குண்டு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் கண்ணீர்ப் புலம்பல்

என்னுள் இருந்து
இவ்வுலகம் வந்தவளே
இனியவளாய் எனக்கிருந்து
ஏற்றவைகள் ஈந்தவளே.
இறுதிவரையும் இருப்பாயென
எண்ணித்தான் இருந்தேனடி
ஏன்தான் இடைநடுவில் என்னைவிட்டு விட்டு
போய்விட்டாய் என்னவளே.
எனக்கு நீ இறுதி செய்வாயென,
உறுதியாய் நானிருந்தேன்
உனக்கு இறுதி செய்ய
ஏனம்மா எனை விட்டாய்

உன்மகவுப் பேற்றை
மகிழ்ச்சியுடன் பார்ப்பதற்கு,
மண் விட்டு நான்,
மாற்றுநாடு இங்கு வந்தேன்
மகளே நீயுன் மரணப் பேற்றை
மாற்றுமண்ணில் காட்டிவிட்டு,
மறு உலகம் ஏன் சென்றாய்?

பாவை உன்னை
பக்குவமாய் வளர்த்தேனடி
பலரும் போற்ற நீ
பண்புடன் வாழ்ந்திருந்தாய்
பாதிவயதில் பாடையில் ஏற்றவா
பாவி மகளே உன்னை
பாரில் படைத்தேனடி.

மனதுள்ளளவும் மகளே உன் இறப்பு
மனத்துன்பம் தந்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமா மாமி புலம்பல்

மண்ணில் மருமகளாய் மலர்ந்து
மதிப்பதை தந்தவளே
மாமன் மாமி நாம்
மலைபோல் இருக்கின்றோம்
மாபாதகன் உன்னையம்மா
மண்விட்டு விண்ணுக்கு
ஏன்தான் எடுத்துவிட்டான்

மாமா மாமியென
மங்கை நீ வாய்மலர்ந்தால்
மாது உனது முகம்
மதிபோல் மாறிவிடும்
உன்மயக்கும் மதிமுகத்தை
மதியீனம் கொண்டவர்கள்
மறைத்துத்தான் விட்டனரே.

மகனுக்கு மாசற்ற மனைவியாய்!
உன்மகளுக்கு மதிப்புடை தாயாய்!!
மற்றவர் மதிக்கும் மகளாய் நீ,
மண்ணில் நீ வாழ்ந்திடுவாய்,
என்ற வண்ணக் கனவுகளை
வாழ்நாளில் நாம் கண்டோம்!
வாழ்வை நீ முடித்து விட்டாய்!!
வாடுகின்றோம் நாமிங்கு!!!

மருமகளாய் நீ இருந்திருந்தும்,
மகளாய் நாம் நினைத்திருந்தோம்!
மகளே நீ மண்விட்டு
விண்ணுக்கு விரைந்ததேன் கூறம்மா.
வாழ்ந்து கெட்டுவிட்டோம் நாமிங்கு
வயோதிபர் எமக்கு
வாய்க்கரிசி போடாமல்
வாலிபத்தில் ஏனம்மா
வானகம் சென்று விட்டாய்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்

தாமோதரம்பிள்ளை + யோகேஸ்வரி

ராதா + சந்திரமோகன்

சீதா + கண்ணன்


சுதா + சிறிதரன்

பிறேமலதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமதருமை கடைக்குட்டியே.....

ஆயிரம் ஆசைகள் ஆயிரம் கனவுகள் உன் மனதில்
அத்தனையும் விட்டு விட்டு உன் ஆருயிர் பிரிந்ததனேன்
பச்சை பாலகியை பெற்றெடுத்த செய்தி பலருக்கு எட்டுமுன்னே
சட்டென்று உன்னுயிர் சரீரத்தை பிரிந்ததேன்.
எமதருமை சகோதரியே எம்மை எல்லாம் மறந்து விட்டு
எங்கே நீ போய்விட்டாய்?

பரதநாட்டியம் தனை பார்புகழ அரங்கேற்றி
இளய வயதினிலே இன்னிசைகள் பலகற்றாய்
கருத்தரித்த வேளையிலும் கடமை பெரிதென
மழலை சிறுமியர்க்கு மாண்புமிகு குருவானாய்
எமதருமைச் சகோதரியே எம்மை எல்லாம் விட்டு விட்டு
எங்கே நீ இருக்கின்றாய்?

பல்கலைக்கழகம் தனிலே பட்டம் பெற சென்ற போது
கொடிய நோய் ஒன்று எம் குலவிளக்கை சூழ்ந்தவேளை
குடும்பநிலை உணர்ந்து குலவிளக்கு அணையுமுன்னே
இனிய மணவாளன் ஜீவகனை மணமுடித்தாய்
எமதருமை சகோதரியே எம்மை எல்லாம் தவிக்க விட்டு
எங்கே நீ சென்றுவிட்டாய்?

வீடு தேடி வருவோரை விருந்தோம்பி உபசரிக்கும்
தமிழர் பண்பாட்டை தந்தையிடம் கற்றறிந்தாய்
அரிய உணவுகள் பல அறுசுவையுடன் பரிமாற
தகுந்த தார்ப்பரியம் தாயிடம் கற்றறிந்தாய்
எமதருமைச் சகோதரியே எம்மை எல்லாம் கதற விட்டு
எங்கே நீ துயில்கின்றாய்?
உனது நினைவு என்றும் எம்முடன் வாழும்!

**ராதா, சீதா, சுதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணியே நீ எங்குற்றாய்......

காலனையும் வெறுக்காத
கற்பகமே எங்கள் அண்ணி - நீ
போன இடம் தெரியவில்லை
பொழுது எமக்கும் விடியவில்லை

சூரியா உனை எடுத்துச்
சுடுகாட்டில் எரித்தனரோ!
சுந்தரமே உன்முகத்தை
எப்போது காண்பதுவோ!

உன் மழலை குரல் கேட்டு
ஓடி நீ வாராயோ!
ஓடி வந்து எம் இதயத்
தவிர்ப்பை நீ தீராயோ!

தனி மரமாய் ஆகிவிட்ட
அண்ணாவை என் செய்வோம்
உன்னிடத்தை நிரப்பிவிட
எம்மால் தான் முடிந்திடுமோ!

அன்னைக்கு அன்னையாம்
அண்ணியே நீ எங்குற்றாய்!
பசிக்கிறதே எம் அண்ணி
பரிமாற வாராயோ!

உன்கையால் உண்ணாத
உணவெல்லாம் உணவல்ல
உன்னை நாம் காணாத
நாள் எல்லாம் நாள் அல்ல

நாம் தடுமாறும் போதெல்லாம்
தைரியத்தை தந்தவள் நீ!
இன்று நீ தூங்கி விட்டாய்
நிம்மதியை யார் தருவார்!

**பாசமிகு மைத்துனன் பார்த்திபன்(பாபு)**
**சகோதரி சிந்துஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மாஞ்சோலை நிறைந்த மீசாலை யூர்தன்னில்
மனம்மகிழத் தாமோதரம் பிள்ளை தம்பதியர்க்கு
வாஞ்சையாய் வளர்த்திட நான்காம் குழந்தையாய்
வந்துநீ பிறந்து வளர்ந்தாய் சிறப்பாக
ஊஞ்சலில் விளையாடித் துள்ளித் திரிந்தநீ
ஊக்கமாய்த் கல்வியில் சிறந்து விளங்கினாய்
பூஞ்சோலை வண்டாகத் கலைத்தேனும் சேர்த்தாய்
புகழ்பரவ நடனத்திற் திறமையைக் காட்டினாய்

2. உயர்லண்டன் மாநகரில் நாம்வந்த போது
உங்கள் நலம்கண்டு மகிழ்ச்சியைக் கொண்டோம்
அயராது நடனமதில் உயர்வாகி நின்றநீ
முன்பு நாம் எழுதிய பலபாடல் தொகுத்தே
பயனடைய அன்போடு எம்மிடங் கொடுத்தாய்
பாரினிலே தங்காமல் விண்ணுலகு சென்றாய்
துயரால் நாம் கதறிஅழ இவ்வுலகை விட்டாய்
தூயஉன் எழுத்துண்டு தலை எழுத்தால் சென்றாய்

3. மாசற்ற குணமோடு திறமையுங் கொண்டாய்
மனமகிழ்ந்து பலருமே வியந்திடவும் நின்றாய்
பேசிநிதம் புகழ்ந்திட்ட நாட்டிய நாடகத்தால்
பலஇடங் களிலுமே திறமையைக் காட்டினாய்
நேசமிகு கணவனொடு பிள்ளையையும் விட்டாய்
நிதமுமே துக்கமுற விரைந்து சென்றுவிட்டாய்
ஈசனவன் இக்குறையைத் தலைஎழுத்தில் வைத்தான்
என்றுமே அனைவரும் தான் துயர டைய விட்டான்

4. சிவசக்தி சங்கீத நர்த்தனா லயத்தில்
சிறந்த ஒரு மாணவியாய்ப் பலநிகழ்ச்சி செய்தாய்
நவமான நல் " விடிவை நோக்கி நாட்டியத்தில்
நம்தமிழீழத்தாயாய் நிகரின்றி நீ திகழ்ந்தாய்
எவரும் தான் போற்றும் மீனாட்சிகல் யாணத்தில்
எங்கும் புகழ்பரவ " மீனாட்சி " யாய்நின்றாய்
கவலையினால் எம்கண்ணீர் சிந்திக் குளமாகக்
காற்றாகி விண்சென்றாய் மீண்டுமிங்கு வருவாயோ

**மாமா ஏரம்பமூர்த்தியும குடும்பத்தினரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கு சென்றாய் எங்கள் லதாகுட்டி?

அம்மா லதா! எல்லோரையும் தவிக்க வைத்துவிட்டு எங்கே சென்றாய் அம்மா, அப்பவுக்கு உதவிக்கு ஒருவரும் இல்லையென அவரிடம் சென்று விட்டாயா?

கதியற்று நிற்கும் கண்நிறைந்த கணவரின் கையில் கைக்குழந்தையையும் கொடுத்து விட்டு, தமிழ் ஈழத்திலிருந்து சீமைக்கு மகளின் பிள்ளைப்பேறு பார்க்கவென எத்தனையோ அடுக்குகளுடன் எவ்வளவோ கஷ்டப்பட்டு ஓடோடி வந்த அம்மா,

நாங்கள் சகோதரிகள் நால்வரென கலகலவென லவ்பேட்ஸ் (Love birds) என கலகலப்பாய் இருந்தீர்களே. இப்போ மூவரையும் கதிகலங்க வைத்து விட்டு,

உடன்பிறவா சகோதரர்கள் மைத்துணர்கள் எல்லோரும் எங்கள் லதாகுட்டி எங்கே என பரிதவித்து கண்கலங்க, மாமா மாமிக்கு பெண் பிள்ளை இல்லை என்ற குறையையும் மைத்துனர்க்கும், ஜீவாவுக்கு சகோதரி இல்லாக் குறையையும் நீக்குவேன் என்றாயே,

எத்தனை எத்தனை கற்பனைகள் எத்தனை எத்தனை திட்டங்கள் போட்டாய் அம்மா, இப்போ எங்கே சென்று விட்டாய்?

சென்ற ஐப்பசியில் நான் கனடாவில் இருந்து வந்தபோது எவ்வளவு அன்பாக வாங்கோ ஆசையம்மா நீங்கள் அல்லது அம்மா என்னுடன் எப்போதும் இருக்க வேணும் போல் இருக்குது என்றும் கூறினாயே. பயணம் தொடர்ந்ததால் முடியவில்லையே என கவலைப்பட்டேன். நீங்கள் பிள்ளைக்கு பல்லுக் கொழுக்கட்டை அவிக்க வாருங்கள் இனி என்றாயே! எல்லோரையும் அன்பாகக் கதைத்து வரவேற்கும் முறை, விருந்தோம்பல், வீட்டை அழகாய் சுத்தமாக வைத்திருக்கும் முறை யாவற்றையும் பார்த்து சிட்டுப்போல் திரிந்த குட்டிக்கு இச்சிறுவயதிலே இவ்வளவு ஆற்றல் எங்கிருந்து வந்தது என வியந்தேன்.

அன்பான அறிவான எங்கள் அண்ணாவின் குணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையும் உன்னிடம் கண்டு வியந்தேன் அம்மா, ஆசையம்மா இவ்வளவு காலமும் நீங்கள் எங்களுக்குச் செய்தவை போதும் இனி நாம் நால்வரும் ஒரு நல்ல நிலைக்கு வந்து விட்டோம் உங்களை இனி நாங்கள் பார்ப்போம் என்றாயே, கண்பட்டு விட்டதோ உன் வாழ்க்கைக்கு,

ஆயிரம் பேர் அரவணைத்தாலும் அம்மாவின் அரவணைப்பைத் தேடும் குழந்தைக்கு அம்மா என்று கூப்பிட யாரை வைத்துச் சென்றாய் அம்மா? யாருக்கு யார் ஆறுதல் சொல்வது?

சீமையில் மருத்துவத்தின் மகத்துவத்தை உன்மேலும் காட்டி விட்டார்களே கயவர்கள்
எப்படி ஆறுவோம் அம்மா?

**ஆசையம்மா (கனடா)**
**செல்லம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குலையுதிர்ந்ததால் வாழ்வளியும்
வாழையினை நாம் கண்டதுண்டு,!! ஆனால்...
குலம் வாழ் ஒரு மகளைக்
தந்ததினால் எம் குலவிளக்கை
காலன்...
அழைப்பன் நென்று நினைக்கவில்லை!!
குருத்தோலை சிரித்திருக்க - முதல் விரிந்த
காலோலை விழுவதனை நாம் எல்லாம்
கண்டதுண்டு...! ஆனால்
பழுத்தோலை போல் பாசமிகு
அண்ணன் நான் இருக்க - பாதியிலே
அன்புத் தங்கை நீ சென்றதனை
சீரணிக்க முடியவில்லை...
மேலைநாடுகளில் மருத்துவர்கள்
மகிமை புரிவர் என்று நீ
நாமெல்லாம் நினைத்திருந்தோம்...!!
நீயும் அதனாலே நிம்மதியாய்
இருந்திருப்பாய்...!!
உன் சாயல் தனைக்கொண்ட
உன் மகளை அணைத்து அன்பு
முத்தமிட்டு பேரும் வைத்திருப்பாய்....!!
நாளை உன் மகளை நல்லபடி
வளர்த்தெடுக்க வீட்டிற்கு விரைந்தோட
விருப்புடனே துயின்றிருப்பாய்...!! ஆனால்
யார்கண் பட்டதுவோ...!!
உயிர் காக்க வேண்டியவர்
உடனடியாய் வந்திருந்தால்
நீ இன்று எம்முடனே
இருந்திருப்பாய்...!!
இது தான் விதியென்று எந்நாளும்
நாம் அழுவோம்
இனி உன்மகள் " லதிகா" அவள் வடிவில்
உன்னுருவைக் கண்டிடுவோம்....

உன் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கும்

**குமணன் அண்ணா குடும்பத்தினர்**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணெனவே நிலவாய் குடும்பத்தில் நீ ஒளிர்ந்தாய்
மைத்துனியே உந்தன் உபசரிப்பில் நாம் குளிர்ந்தோம்
ஜீவகனை, தளிராம் லதிக்காவை ஏங்கவிட்டு
எங்கே உயரத்தில் நீ மறைந்தாய் தேடுகின்றோம்

(மைத்துனர்கள்)

அன்பான மைத்துனியே அழகே உருவானவளே
அலங்காரம் பண்ணி ஆவலாய் நாமிருந்து
எழிலார்ந்த நடனமதைக் கண்டு இனித்தவற்றை
எப்படி நாம் மறக்க இனிவருமோ ஏங்கிநின்றோம்.

(மைத்துனிமார்)

செல்லக் கதைபேசி சின்னப் பிள்ளையுமாய்
சொன்ன மொழிகள்பல தோன்றிநிதம் மறையுதடி
என்ன கதியுனக்கு ஏனிந்தக் கொடுமை செய்தார்
எண்ண எண்ண எங்கள் இரத்தம் கொதிக்குதடி

(அத்தைமார், மாமாமார்)

கண்ணுக்குள் நிறைந்த கலை மாட்சி
" தமிழீழத் தாயன்பே ஏன் அழுதாய்
தமிழ்தானா உன்குரலில் சோகமேதோ"
அதுவே இன்று நிஜமாகி விட்டதுவோ?
எத்தனை கோலங்களில் உனைப் பார்த்தோம்
அந்தநாள் ஞாபகம் அலைமோதி வருகுதடி
வந்தஉன் சேதியது பொய்யாகி மாட்டாதோ
புண்ணாகி நெஞ்சம் கனலாய் எரியுதடி

(அன்ரிமார்)

இருபத்தெட்டிற்குள் உன்வாழ்வு முடிந்ததுவோ
இலண்டனிலே உன்மகவை பிரசவித்துக் கொடுத்துவிட்டு
ஏந்திழையே எங்கே பயணித்தாய் நண்பிகள் நாம்
உன்னுடலும் காணாது புழுவாகத் துடிக்கின்றோம்.

(நண்பிகள்)

பூங்காவாய் நீவாழ்ந்த கந்தமா தனந்தன்னில்
ஒருநாள் வருவாயென்று நாம்காத் திருந்தோமே
பூவோடும் பொட்டோடும் புன்னகை தன்னோடும்
போய்விட்டாய் என்றசேதி வேல்போல் பாய்ந்ததடி

(மீசாலை ஊரார்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவு ஒரு கேள்விக்குறி?

குடும்பக் குலவிளக்காய் குலம் சூக்க வந்தவரை வைத்தியர்கள் ஏமாற்றியதேன்?
பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டு, ஆனால் குறுகிய காலம் வாழ்ந்து எதிர்பாராத விதமாக மறைந்ததேன்?" நிறைகுடம் தழும்பாது குறைகுடம் தழும்பும்"
என்ற வாக்கிற்கேற்ப நிறைகுடமாக இருந்து மடிந்ததேன்?
கல்விக்கும் கலைக்கும் முக்கியத்துவம் கொடுத்து பல வெற்றிகளைக் கண்டு இன்னும் பலவற்றை சாதிக்காமல் சென்றதேன்? மைத்துனியாக மட்டுமல்லாமல் சகோதரியாகவும் எம்மோடு பழகிவிட்டு எம்மை என்றும் ஆறாத்துயரில் ஆழ்த்தியதேன்?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**பகீரதன் குடும்பம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனடி சேர்ந்தவள் நீயே

நீ பிறந்த போது உன் வீட்டிற்கு வந்து ஏணைக்குள் இருந்த உன்னை எட்டிப்பார்த்த போது உன் அம்மம்மா கவனம் பிள்ளை என்று என்னை விரட்டினார். அப்போது பக்கத்தில் இருந்த யாரோ ஒருவர் பரணி நட்சத்திரத்தவள் தரணி ஆளப் போகிறாள் ஏன் உங்களுக்கு இந்தப் பயம் என்று சொன்னது நன்றாக எனக்கு ஞாபகம் இருக்கின்றது ஆனால் இந்தப் பரணியில் வாழ்ந்து முடிக்க முன்பு ஏன் மறைந்தாய் என்று தெரியவில்லை.

நீ இங்கே U.K வந்தபோது U.K இற்கு இங்கு வந்த முதல் உறவினர் லதா என்று எல்லோருக்கும் சொல்லித்திரிந்தது வீணாய்ப் போய்விட்டது.

பிள்ளையோடு வீடு வந்து சேரும் செய்தி கேட்டு காத்திருந்தபோது எங்களுக்கு காலன் ஓர் ஒரு சேதி சொன்னான். பார்த்திருக்க வளர்ந்த லதா பாரை விட்டுப் போனதாக, கேட்ட செய்தி பொய்யாக இருக்கக்கூடாதா என்று பலமுறை மனம் அழுதது.

சிவனடி சேர்ந்தவள் நீயே நாம் சிந்தை கலங்குவது வீணோ, சாந்தமாய் நீயே உறங்க நாங்கள் யாவரும் பிரார்த்திக்கின்றோம். உன்வடிவை உன்மகள் லதிகாவில் கண்டு மகிழ்கின்றோம்.

**ஏ. இளமுருகன்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிகாலை வேளையிலே**

தொலைபேசி மறுமுனையில்
மைத்துனரின் விம்முதலில்
உன் இறப்பு செய்தி கேட்டு
எம் இதயம் துடித்ததம்மா!

அன்பான லதாமாமி
அரவணைக்கும் லதாமாமி
அன்புக் கதை சொல்லி
அதிக நாள் ஆகவில்லை
என்றுதான் காண்போம்
இனி எங்கள் லதாமாமியை!

உறவில்லா பிள்ளைகளை
உரிமையுடன் அரவனைத்த
எங்கள் லதா மாமி
எவருக்கும் சொல்லாமல் - ஏன் அம்மா
இறைவனிடம் சென்று விட்டா!

நடனத்தில் உயர்ந்து புகளோடு வாழ்வதற்கு
நடனத்தை ஆரம்பித்து ஆர்வத்தோடு கற்பதற்கு
பாடுபட்ட லதாமாமி இன்றில்லை இவ்வுலகில்
வைத்தியரின் சதியா வயதாகிப் போனதா
ஏங்கியே இருக்கின்றோம் மாணவர்கள் நாங்கள்

ஆறாத்துயரில் வாடும்
**நித்தி, குமாரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்க்கருத்தாக்கம்

மங்கைநீ மணம் கொண்டாய்!
மணத்தின்பின் மனத்திற்கினியானாம்
மணாளன் மடியில்நீ
மகிழ்ச்சியாய் மலர்ந்திருந்தாய்!!
மணாளன் மடியில்நீ
மகிழ்ந்து போதுமென்று
மலர்போன்ற உன்மடியில்
மகிழ்ந்து மலர்ந்திருக்க
மண்ணில் மகவொன்று மலர
மருத்துவத்தை நம்பியம்மா!
மங்கைநீ மதிகெட்டுப் போய்விட்டாய்!!

மருத்துவத்தின் மதியீனம்
மண்ணிலுன் மழலையைமட்டும்
மனம்நோக விட்டுவிட்டு
மலரின் மென்மையாம் உன்
மனதிற்கினிய மடிதனை
மண்ணைவிட்டு மறைத்ததேன் ? கூறம்மா?
மடிகேட்டு மனம்வெதும்பும் உன்
மகிழ்ச்சி மழலைக்கு
மண்ணில் இனிமேல்
மடிதருவார் யாரம்மா.!!!

குடும்பக் குலவிளக்காய் இருந்தவளே!
உன்கூடாம் குதூகல வீட்டில்
குதித்து விளையாட
குழந்தையொன்று கொண்டுவர
உன்கோல முகத்தில்
குழிவிழுந்த சிரிப்பொன்று காட்டியம்மா
கொடியநோயதை குஒப்படுத்தும்
கூடாரமொன்றுக்கு சென்றிருந்தாய்!!!
உன்குருதியது கொப்பளிக்க
கொடியோர் உனை கொன்றேவிட்டனரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளறப்போகுமுன் குழந்தையை
குதூகலப்படுத்த குவலயத்தில்
யாரம்மா இங்குண்டு!!!!!!!

கட்டியவன் காதோரமிருந்து
கதைகள் பலகதைத்து
கனவுபல கண்டாயே!
கணவனின் கஸ்டம் கண்டு
கலங்கியவள் நீயம்மா!!!!
கட்டியவன் கதறுகிறான்!
காவித்திரிய ஆளின்றி உன்
கைக் குழந்தை கத்தப்போகிறது!!
கடைசிவரை காலத்தைக் கழியாது
காலனது கைகளிலே ஏனம்மா
கண்ணுறங்க சென்றுவிட்டாய்!!!

உன்பிஞ்சுப் பிள்ளையதை பெற்றெடுக்க
பிரசவக் களத்திலம்மா!
கால்வைத்த வேளைதனில்
உன்மென்மைக் கால்களுக்கு
மெருகுதந்த மெட்டிதனை
மாட்டிய உன் கட்டியவன்
களற்ற வந்த வேளைதனில்
கட்டியவன் மெட்டியதை களற்றிவிட்டால்
காலனவன் கவன்றிடுவான் எனக்கலங்கி
மெட்டி களற்ற மறுத்ததம்மா
மேதினியில் வாழ விருப்புற்றாய்!
உன்வீட்டிலுள்ள மெட்டி விம்முதம்மா
மேதினியில் மீண்டும் நீ
வீட்டுக்கு வா அம்மா!!!!!!

தரணிக்கு உனைத்தந்த தாயவள்
தணல்போல் தவிக்கின்றாள்!
தரணிக்கு வந்தொருக்கால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்தாயின் தவிப்பதை போக்கம்மா!!
அரக்கனவன் அழிக்கவந்த வேளைதனில்
ஆயமருத்துவம் கற்றறிந்த
உன் அக்காள் உனக்கு
அரணாக அருகில் அமர்ந்ததை
அரக்கன் அவனுக்கு அறிவிக்க
ஏனம்மா மறந்திருந்தாய்!
அறிவித்திருந்ததால் அரக்கனவன்
உன்னை அழித்தே இருந்திருக்கான்!!!

உன்சாவின் சங்கதிகேட்டு
சத்தமிட்ட உன்சலங்கைகள்
சாவுகஸிகு சாபமிட
சபதம் எடுக்குதம்மா!

கட்டியவள் நீ இல்லையென்றால்
கவனிக்க எனை யாருண்டென்று
உன்வீட்டுக்கட்டில் கதறுதம்மா!!

தூங்கா உன் குழந்தையை
தொட்டுத் தாலாட்ட
எனை தொடுவார் யாரென்று
உன்வீட்டுத் தொட்டில்.!!!
துயரால் தோயுதம்மா!!!
அரும்பிய உன் அழகுமழலை
அம்மாவென அழைக்குமுன்
அடுத்த உலகம் யாரம்மா
உனை அழைத்தார்!!!!

**க. சிறிதரன்.**
Redhill
Surrey


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைமொழி

மின்னலைப் போலத் தோன்றி
மறையும் பூவுலக வாழ்வு
அன்னைதந் தையோடு சுற்றம்
அனைத்துமே மாய மாகும்
முன்வினைப் பயனால் வந்தோர்
சேர்ந்தசந் தையிலே கூட்டம்
இன்னல்சேர் பிறப்ப கன்றோர்
இறையடி தனிலே சேர்வார்

ஆதலால் துயரை நீக்கி
ஆறுதல் அகத்தில் கொள்வோம்
பாதகச் செயலை நீக்கிப்
புண்ணியம் தனையே செய்வோம்
பூதலம் தனிலே காணும்
கோயில்கள் எங்கும் சென்று
மாதொரு பாக னாரின்
மலரடி தொழுது வாழ்வோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**மீசாலையூர்**
**அ. கி. ஏரம்பமூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆரத்தி

ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம்ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய -
அம்மம்மா தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை - ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரமருள்வாய் - அம்மம்மா ஈஸ்வரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி
காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் -
அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலமே - ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து ஞான நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா - ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
எம்மை எல்லாம் விட்டுப் பிரிந்து
இறையடி சேர்ந்த
**திருமதி பிரேமலதா ஜீவகன் அவர்களின்**
மறைவுச் செய்தி கேட்டு
ஓடி வந்து நேரில் ஆறுதல் வார்த்தைகள் கூறிய
உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும்
தொலைபேசி மூலமும் கடித மூலமும்
அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்
இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும்
அந்தியேட்டிக்கிரியைகள் மற்றும் அனைத்திற்கும் எம்முடன்
நின்று உதவிகள் புரிந்தவர்களுக்கும்
இன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில்
பங்குபெறும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்
எங்கள் உளம் நிறைந்த
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்



Printed by **JR PRINT** London Tel: 020 8303 6643 www@jrprint.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org